முருகப்பெருமான் துணை

**மகான் மாலாங்கன் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.08.2023**, புதன்கிழமை

1. தவபலமிக்க ஞான குருவே
தரணிக்கு தனி ஞானமருள
அவதாரம் புரிந்த அண்ணலே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா முப்பானோர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 31 ம் நாள், 16.08.2023, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க மாலாங்கன் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நெறி அரங்கன் நெறி
ஞானமாக ஏற்று வந்திட
ஞானியாக மக்களாவது உறுதியென்பேன்
4. என்கவே அரங்கன் காட்டும்
ஈடு இணையில்லா சன்மார்க்க
சன்மார்க்க நெறி முறைதனை
சட்டென ஏற்று வணங்கி
5. வணங்கி முழு சரணாகதி
வாழ்வில் கொண்டு வர
வணங்கி வேலவன் வெளிப்பட
வள்ளல் நெறி ஜோதி வழிபாட்டை
6. வழிபாட்டை நாளும் செய்து
வையகம் தானும் அடைய
வழிபாட்டை எங்கும் பரப்பி
வறுமை வாட்டும் பசிபிணி அகல

7. அகலவே அன்னதான சேவை
அளவிலா எங்கும் பரப்பி
வகைபட மிகுதி செய்து
வாழும் காலமே தருமவான்களாக
8. ஆகவே மக்கள் நிலை மாற
ஆற்றல்பட உலகமெங்கும்
மிகைபட தருமபலம் கூடி
முன்னேற்றம் உலகம் காணும்
9. காணவே அரங்கன் நெறி
காலப்போக்கில் கட்டளையாக
ஞானமாக எங்கும் நிலைத்திட
ஞானவான்கள் படையாக மக்கள்
10. மக்கள் சக்திநிலை பெருகி
மரணம் வெல்லும் ஞானிகளாக
ஆக்கமுடன் தேறுவர் மாறுவர்
அனைத்தும் அரங்கர் மயமாகி
11. ஆகியே உலக மாற்றம்
அனுகிடும் ஞான ஆட்சியாக
அகிலம் அமைதி பாதுகாப்பையும் பெறும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—